ஜனவரி - 2010


திருவள்ளுவர் ஆண்டு 2040

# செந்தமிழ்

தொகுதி : 53
பகுதி : 3

விலை ரூ. 10/-

திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச் சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

# மதுரைத் தமிழ்ச்சங்கம்
# செந்தமிழ்க் கல்லூரி

மதுரை - 625 001

[ ஐந்து நட்சத்திரத் தகுதி பெற்றது ]

( மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைப்புப் பெற்றது)

# தமிழாசிரியர் பயிற்சிச் சான்றிதழ் வகுப்பு

## (TAMIL PANDIT TRAINING CERTIFICATE COURSE)

(ஆண் - பெண் இருபாலருக்கும்)

தகுதி : புலவர் பட்டயம் / பி.லிட். பட்டம் / பி.ஏ. தமிழ் பட்டம் தேர்ச்சி

மிகக் குறைந்த கட்டணம் !

நன்கொடை கிடையாது

காலம் : 90 வேலை நாட்கள்
( முழுநேரப் படிப்பு )

**2010 - 2011ஆம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது**

முனைவர் க. சின்னப்பா
முதல்வர்

திரு. இரா. குருசாமி பி.ஏ.
செயலாளர்

# செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 53 திங்கள் இதழ்
பகுதி : 3 திருவள்ளுவர் ஆண்டு 2040
சனவரி 2010



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

ஆசிரியர்
இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்

விருந்துப் பா 4

பெரும்புலவர். இரா. இளங்குமரன்

சாஸ்திரியாரின் சொல்லதிகார அணுகுமுறையும் உருபனியல் கோட்பாடும் 7

முனைவர் வி. ரேணுகாதேவி

வரலாற்று நோக்கில் இராமேஸ்வரம் 13

முனைவர் பு. வேம்பரசி

திருவள்ளுவரின் திறந்த மனம் 16

திருமதி. இராசம் மரகதம்

பொறியும் புதமும் 19

திரு. ஆறுவிரல் ஐம்பொறி

நற்றிணையில் மலர்கள் வழி அறியலாகும் சிந்தனைகள் 23

திரு. த. செந்தமிழ்ச் செல்வன்

பட்டினத்தாரின் இறைச் சித்தாந்தம் 29

செல்வி. இரா. கவிதா

திருக்குறள் உவமை – சிவபெருமான் உவமேயம் 36

திரு. தெ. முருகசாமி

# இதழ் மணம்

அன்புடையீர்,

தமிழ் உள்ளங்களுக்கு வணக்கம்.

அவிச்சுவை நுகரும்போதுகூட, தமிழறிஞர்கள் செவிச்சுவையோடு நுகர்ந்தார்கள் என்ற தமிழுணர்வுச் செய்தியை "விருந்துப்பா" என்ற பொருளில் நம் தமிழ்ச்சங்கச் சான்றோர் பெரும்புலவர் இரா. இளங்குமரனார் அவர்கள் வழங்கியமை நம்மை பெருமை கொள்ளச் செய்கிறது.

சென்ற இதழின் தொடர்ச்சியாகப் பேராசிரியை வீ. ரேணுகாதேவி தன் மொழியியல் இக்கட்டுரையை இவ்விதழில் செம்மையுற வழங்கியுள்ளார்.

ஆன்மிக முக்கியத்துவம் பெற்ற இராமேஸ்வரம், வரலாற்று முக்கியத்துவம் பெற்றது என்பதை முனைவர் பு. வேம்பரசி தன் கட்டுரையில் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

மனிதனுடைய வாழ்க்கை செம்மையுற அமைய வேண்டுமெனில், மனம் செம்மையாக இருக்கவேண்டும் என்பதை திருமதி. இராசம் மரகதம் அம்மையார் அவர்கள் குறள் செய்தியுடன் ஆய்வு நோக்கத்தோடு வழங்கியுள்ளார்.

ஐம்பொறிகளுக்கும் ஐம்பூதங்களுக்கும் இடையிலான தொடர்பை நுட்பமாக திரு. ஆறுவிரல் ஐம்பொறி காட்டியுள்ளார்.

உள்நாட்டு பாதுகாப்பு குறித்து 17-08-09 அன்று நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் பிரதமர் ஆற்றிய உரையில் ஒரு பகுதி இவ்விதழில் இடம்பெற்றுள்ளது.

நற்றிணை இலக்கியங்களில் சுட்டப்பெற்றுள்ள மலர் பற்றிய சிந்தனைகள் திரு. த. செந்தமிழ்ச் செல்வன் கட்டுரையில் வெளியாகியுள்ளது.

பட்டினத்தாரின் இறைக் கொள்கையை ஆய்வாளர் கவிதா தன் கட்டுரையில் சிறப்பாக வெளிக்காட்டியுள்ளார்.

தெய்வத்திற்கு உவமையாகத் திகழ தகுதி வாய்ந்தது திருக்குறள் மட்டுமே என்பதைத் தமிழாசிரியர் தெ. முருகசாமி மிக நுட்பமாக ஆராய்ந்து எளிமையாக விளக்கியுள்ளார்.

இனி நீங்களும் இதழும்....

முனைவர் க. சின்னப்பா

# விருந்துப் பா

தமிழ்ச் சங்க சான்றோர்,
பெரும்புலவர் இரா. இளங்குமரனார்

"விருந்தே புதுமை" என்பது தொல்காப்பியம். விருந்தோம்பல் என்பது திருக்குறள் ஒன்பதாம் அதிகாரம்.

புதுவதாக வருவாரைப் பேணுதலும், புதுவதாகத் தோன்றும் இலக்கிய வகைகளை ஏற்பதும் ஆகிய இரண்டுமே பண்டு தொட்ட தமிழ் வழக்காறு.

**பொன். பாண்டித்துரையார்** மதுரையில் ஒரு தமிழ்ச் சங்கம் தோற்றுவித்தார். தமிழகமேயன்றி ஈழத்துப் புலவர்களும் கூடினர்; ஆய்ந்தனர். அந்நாள் புலமையர்க்கு அளவு கோல் தமிழ்ச் சங்கமே என அமைந்தது. "சிறந்த சங்கங்கள் எழுந்த மாட்சிமை இச் சங்கம்" எனச் சங்கச் சீர்மை, பாவாக, உரையாக இயற்றப்பட்டன.

சங்க விழா என்றால் இருவகை விருந்துகள் உண்டு. செவிச்சுவை, அவிச் சுவை என்பன அவை.

ஆறு சுவைய அவிச்சுவை தானும் ஆறிப் போனால் சுவை அற்றுப்போகும் ! ஆனால், எண் சுவைய இலக்கியச் சுவையோ எண்ண எண்ண என்றும் சுவையாகத் திகழும். கேட்டவர்க்கு அன்றிக் கேளாதவரையும் கேட்டவர் வாய்க் கேட்கத் தூண்டும். அத்தகைய விருந்தொன்றை அறியலாம்.

"சோழாந்தக நல்லூர்" எனப்பட்ட ஊர், "சோழவந்தான்" என இந்நாள் வழங்குகின்றது. பிறந்த மண்ணுக்கு ஈடிலாப் பெருமை சேர்த்தவர் பெரும்புலவர் அரசஞ் சண்முகனார். சங்கப்புலவர், ஆய்வுப் பெருமகன்; பாவன்மை நாவன்மை மிக்கார்; சங்கக் கல்லூரிப் பேராசான்!

சங்கத்தின் புலமை விருந்தும் சுவை விருந்தும் வரலாற்றுச் சிறப்புடையவை. இரண்டையும் இணைக்கும் வகையில் ஒரு விருந்து திகழ்ந்தது.

சுவை விருந்து படைத்தவர், **இராமாநுசம்** என்பவர். அவரிடம் ஒவ்வொரு புலவரும் தமக்கு வேண்டும் சுவைப் பொருளை வழங்க வேண்டிக் கொள்ளுமாறு,

*சங்கொடுவா ராமாநுசம்*

என்னும் ஈற்றடி அமைய, வெண்பாப் பாட வேண்டும் என்றார் **அரசஞ்சண்முகனார்.**

முதலாவர்க்கு இயல்பாக "ரசம்" வேண்டியிருந்தது. அதனால்,

*(ர) சங்கொடுவா ராமாநுசம்*

எனப் பாடினார். அடுத்தவர் ஒரு கண்ணோட்டம் விட்டார். அவர் கண்ணில் படைக்கும் பண்டங்களில் 'அதிரசம்' தோன்றியது. அதனால் அவர் (அதிர) சங்கொடுவா ராமாநு சம் எனப் பாடினார். அடுத்தவர்க்கு ஏந்தாக ஒன்று தென்பட்டது. அது, பாயசம். அதனால், (பாய) 'சங்கொடுவா ராமாநு சம்' என்றார்.

ஈற்றடி தந்த சண்முகனார் பாடவேண்டிய வரிசை. அங்கே 'சம்' வருமாறு எதுவும் இல்லை. அதனால், படைக்கப்பட்ட காய்கறியை (இன்னும் கொஞ்) சங்கொடுவா ராமாநு சம் எனத் திறமாகப் பாடினார்.

*உள்ள பண்டங்களைப் பற்றிய பாடிய சிறப்பினும்*
*ஓங்கிய சிறப்பாக, 'இன்னும் கொஞ்சம்'* என்பது விளங்கியது.

இப்பாடலையும் செய்தியையும் சோழவந்தானில், அரசஞ் சண்முகனார் நூல்கள், வரலாற்றுச் செய்திகள் ஆகியவற்றைக் களஞ்சியமாக மனத்தகத்துக் கொண்டிருந்த கணியர் இராக்கப்பபிள்ளை அவர்கள், எனக்குக் கூறினார்கள். சண்முகர் வரலாறு எழுதிய காலத்து நிகழ்ச்சி இது, ஏறத்தாழ ஐம்பதாண்டுகளின்!

இச்செய்தியை விருந்து என்னும் பொழிவில், மதுரை தி.வி.க. உயர்பள்ளி இலக்கிய மன்ற விழாவில் கூறினேன். மாணவர்களுக்கு மகிழ்வு! அவ்வாறு கேட்டவருள் ஒருவர் சண்முக சுந்தரம். அவர் இதுகால் சுங்கத்துறை அலுவலர் அதனை நினைவூட்டி மகிழ்ந்தார். ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் அவர்கேட்ட செய்தி இது. எவ்வளவு சுவைச்செய்தி என எண்ணினேன். சங்கொடுவா ராமாநு சம் என்பதை முழுமையாக்கலாமே எனக் கருதினேன்.

செயற்கை உறுப்புகளால் செயலியக்கம் கொள்ளும் மாந்தர்கள் கண்முன் காட்சிதரும் படைப்புலகில் புலமைப் பாப் படைத்தல் இயலாதா?

அவ்வீற்றடியைக் கொண்டே நான்கு வெண்பாக்களைப் பாடினேன். மேலும் புலவர்கள் சற்றே துயில மஞ்சம்(படுக்கை) கேட்பதாக (மஞ்) சங்கொடுவா ராமாநு சம் எனவும் புதிது ஒன்று பாடினேன். அவை

*(ர) சங்கொடுவா ராமாநு சம்*

1) செந்தமிழ்ச் சங்கச் செழும்புலவர் பேரவைக்கு
வந்துள்ள சான்றோர்கள் வாய்மணக்கச் – சிந்தையுற
எங்கெங்கும் வேட்கும் இனிய மிளகுர
சங்கொடுவா ராமாநு சம்.

*(அதிர) சங்கொடுவா ராமாநு சம்*

2) நான்காம் தமிழ்ச்சங்க நல்லாய்வுப் பேரவையின்
சான்றோர் களிக்கச் சமைத்துள்ள – ஆன்றசுவை
தங்கும் அருமையால் தன்பெயர் தாங்கதிர
சங்கொடுவா ராமாநு சம்.

*(பாய) சங்கொடுவா ராமாநு சம்*

3) வள்ளல் பெருமகனார் வான்பாண்டிச் செல்வனார்
உள்ளங் கவரும் உயர்புலவர் – உள்ளகம்
பொங்கித் ததும்பிப் பொழி தமிழே போல் பாய
சங்கொடுவா ராமாநு சம்.

*(கொஞ்) சங்கொடுவா ராமாநு சம்*

4) நான்மாடக் கூடலை நற்றமிழ்ச் சங்கத்தால்
தேன்மாடக் கூடலாய்த் தேடிவரு – வான்புலவர்
தங்கிச் சுவைக்கத் தருகறிகள் இன்னுங்கொஞ்
சங்கொடுவா ராமாநு சம்.

*(மஞ்) சங்கொடுவா ராமாநு சம்*

5) உண்ட களைப்பால் உயர்புலவர் எல்லாரும்
கண்டுயில் கொள்ளக் கருதுகின்றார். அண்டையில்
இங்குள்ள மண்டபத் தேற்றுத் துயிலமஞ்
சங்கொடுவா ராமாநு சம்.

இது யாப்பியல் வகையில் ஓர் ஐந்தகப்பா ஆகிவிட்டது!
எட்டகம் என்றொரு நூல் இருந்தது அதன் பெயர்,
சிற்றெட்டகம்! பத்துப்பாலாயின் பத்தகம், பதிகம்!
இவையெல்லாம் இலக்கிய வகைமைகளாம்!

# சாஸ்திரியாரின் சொல்லதிகார அணுகுமுறையும் உருபனியல் கோட்பாடும்

- சென்ற இதழ்த் தொடர்ச்சி.....

முனைவர் வீ. ரேணுகா தேவி
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

வேற்றுமை, பெயர் முதலிய குறிகள் (Symbols) தொல்காப்பியர் முன்னர் இருந்த இலக்கண ஆசிரியர்கள் இட்ட குறியாகையால், அக்குறிகளே அவற்றின் இலக்கணத்தைக் குறித்தல் பண்டையோர் வழக்கு ஆதலாலும், வேற்றுமை, பெயர் இவற்றிற்கு தொல்காப்பியர் இலக்கணம் கூறாமையாலும் வினைக்கும் இலக்கணம் கூறாது விடுத்தார் எனக் கூறலாம் என்பார் சாஸ்திரியார். எவ்வாறு எனின் வினை என்ற சொல்லால் குறிக்கப்பட்ட இலக்கணம் யாது எனின் செயலைக் குறிப்பது வினையாகும் என்பதே. எனவே இலக்கண நூலாசிரியர் வினையெனப்படு என்ற நூற்பாவின் இறுதியில் "பொருட்புடை பெயர்ச்சி புலப்படுவதுவே" எனச் சேர்த்தனர் என்பார் சாஸ்திரியார்.

தெரிநிலை வினை, குறிப்புவினை என வினை இருவகைப்படும். தெரிநிலை வினை என்னும் குறி பிற்காலத்தில் வந்தது எனவும், அதற்குப் பதிலாக வினையென்றே வழங்கியிருத்தல் வேண்டும் என்பது

*குறிப்பினும் வினையினு நெறிப்படத் தோன்றி*
*அம் மூவுருபுன் தோன்றலாறே* (தொ.சொ.201)

என்ற நூற்பாவிலுள்ள "வினையினும்" அறியலாம் எனக் கருதுகிறார் சாஸ்திரியார்.

**குறிப்பு வினை**

*இன்றிலவுடைய வென்னுங் கிளவியும்*
*அன்றுடைத்தல்ல வென்னுங் கிளவியும்*
*பண்பு கொள் கிளவியமுள வென் கிளவியும்*
*வண்பினாகிய சினை முதற்கிளவியும்*
*ஒப்பொடு வருஉங் கிளவியொடு தொகைஇ*
*அப்பாற் பத்துங் குறிப்பொடு கொள்ளும்*
(தொ.சொ.220)

என்னும் நூற்பாவில் குறிப்பு வினைகள் இன்று, இல, உடைய, அன்று, உடைத்து, அல்ல பண்பினை உணர்த்தும் வினை அடிச்சொற்கள் (verbs with stem p.205) உள, verbs with stem denoting qualified limbs and verbs with stem denoting camparison என்பதாகும். இவற்றுடன் உண்டு என்பதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்கிறார் சாஸ்திரியார். அதற்குக் காரணம் "உம்முந்தாகுமிடனுமா ருண்டே" (தொ.சொ.292) என்னும் நூற்பாவில் 'உண்டே' என்னும் சொல்லைத் தொல்காப்பியர் பயன்படுத்தியிருக்கிறார் என்பதால்.

குறிப்பு வினை தமிழ் மொழிக்கு ஒரு சிறப்புப் பகுதி என்று சாஸ்திரியார் கருதுகிறார். அவை தொடக்கத்தில் வினையாலணையும் பெயராய் நின்று அதன் பின்னர் ஆகும் போன்ற வினையைக் கொண்டு பின்னர் அவ்வினையின்றி அவையே முடிக்கும் சொல்லெனக் கருதப்பட்டு அது வினையின் ஒரு பகுதியெனக் கொண்டிருத்தல் வேண்டும் என்று குறிப்பு வினையின் வளர்ச்சி பற்றி குறிப்பிடுகிறார் சாஸ்திரியார்.

தெரிநிலை வினையைத் தன்வினை, பிறவினை என இருவகையாகப் பிரிக்கலாம். வினையாற் குறிக்கப்படும் செய்கை வினை முதலால் செய்யப்படின் அது தன்வினையென்றும், வினை முதலன்றி வேறு ஒருவரால் செய்யப்படின் அது பிறவினையென்றும் கொள்ளப்படும்.

**இடைச்சொல்**

இடைச்சொல் பெயர்ச்சொல், வினைச்சொல் இவற்றின் விகுதியாகும். சில இடைச்சொற்கள் சொற்றொடரின் இடையிலும் இறுதியிலும் வரும். அவை உம், ஏ முதலியன.

*அவனும் இவனும் வந்தான் என்பதிலுள்ள உம்*
*ஃகானொற்றே யாஉ வறிசொல்*

என்னும் தொடரில் ஒற்றே – ஒற்று + ஏ இடைச்சொற்கள் தனித்து இயங்காது என்பதைத் தொல்காப்பியர்,

*இடையெனப் படுவ பெயரொடும் வினையொடும்*
*நடை பெற்றியலும் தமக்கியல்பிலவே*

*(தொ.சொ.249)*

என்னும் நூற்பாவில் கூறியுள்ளார்.

சேனாவரையரும், தெய்வச்சிலையாரும் இடைச்சொற்கள் எல்லாம் வாசகமல்ல அவை தனக்கு ஒரு பொருளல்லாது தன்னோடு இயைபு பட்டதற்கு ஈண்டு இதுதான் பொருள் எனக் குறிப்பதாகும் என்பர்.

வேற்றுமையுருபுகளும், சாரியைகளும், வினைவிகுதிகளும், அசைநிறை, இசைநிறை, குறிப்பிற் பொருள் செய்குவ, ஒப்பில் வழியாற் பொருள் செய்குப முதலிய சொற்களும் இடைச்சொற்கள் ஆகும் என்பார் தொல்காப்பியர் என்கிறார் சாஸ்திரியார்.

**உரிச்சொல்**

உரிச்சொல் இசை, குறிப்பு, பண்பு இவற்றில் ஒன்றைக் குறித்தும், பெயர், வினை இவற்றுள் தடுமாறியும் ஒரு பொருள், பலபொருள் பெற்றும் வரும் என்பார் தொல்காப்பியர். இதனை இலக்கணச் சூத்திரம் கொண்டனர் அந்நூல் உரைகாரர்கள். இலக்கணச் சூத்திரத்துள் அஃது ஒரு பொருள் கொள்ளும் எனவும், பலபொருள் கொள்ளும் எனவும் கூற வேண்டியது இன்மையால் அச்சூத்திரம் அதன் தன்மையைக் கூறிற்று என்பதே சாஸ்திரியாரின் கருத்து. அவ்வாறு எனின் அதன் இலக்கணம் யாது எனின் உரிமைப்பொருளை உணர்த்தும் பகுதி எனலாம். உரிமைப் பொருள் என்பதற்குச் சிறப்புப் பொருள் எனப் பொருளாகும். பெயர், வினை இவற்றுள் விகுதியைக் காட்டிலும் பகுதிக்குச் சிறப்பு மிகுந்தமையின் பகுதியைச் சிறப்புப்பொருள் காட்டும் பகுதியெனக் கூறுதல் தரும் என்னும் சாஸ்திரியாரின் கூற்றிலிருந்து இன்றைய சொல் வகையில் பெயரைச் சிறப்பித்து வரும் பெயரடை, வினையைச் சிறப்பித்து வரும் வினையடை இவ்விரண்டே சுட்டப்படுகின்றன எனத் தெரியலாம். எனவே இன்றைய வழக்கில் உள்ள பெயரடை, வினையடை என்ற இரண்டையும் உள்ளடக்கியதே உரிச்சொல் எனத் துணியலாம்.

**தொகை:**

தொகை என்ற சொல் மறைபடுதல், ஒழுங்கு சேர்தல் என்று இருபொருட்கொண்ட தொகு (தொக்கி, தொகுத்து) என்ற வேர்ச் சொல்லிலிருந்து பிறந்தது. எனவே சொற்கள் ஒழுங்கு ஒலிக்கப்பட்டு இடையில் வேற்றுமையுருபு, உவம உருபு முதலியன மறைபட அவற்றைத் தொகை என வழங்கலாம். இவ்வாறு இரண்டு பொருளையும்

உள்ளடக்கிய வேர்ச் சொல்லிலிருந்து பிறந்த தொகை என்ற சொல்லைத் தொல்காப்பியர் பயன்படுத்தியுள்ளதை சாஸ்திரியார் வியந்து பாராட்டுகிறார்.

தொகை வேற்றுமைத்தொகை, உவமத்தொகை, வினைத் தொகை, பண்புத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித் தொகை என அறுவகைப்படும் என்பது,

*வேற்றுமைத் தொகையே யுவமத் தொகையே*
*உம்மைத் தொகையே யன்மொழித் தொகையென்று*
*அவ்வாறென்ப தொகை மொழி நிலையே*

*(தொ. சொ. 412)*

என்னும் நூற்பாவில் பெறப்படும்.

இரண்டும் இரண்டிற்கு மேற்பட்டச் சொற்களும் இணைந்து ஒரு சொல் போல் இயங்குவது தொகை (compound) ஆகும்.

Compound words have two or more, free forms among their immediate constituents என்பார் புளும் பீல்டு (1933: 226)

A compound as a word composed entirely of smaller words என்பார் Block and Tragar (1942: 225)

In the stem compounds, both the immediate constituents are themselves stems (1958: 240) என்பார் ஹாக்கெட்.

எனவே தொகை இரண்டும் இரண்டிற்கும் மேற்பட்ட சொற்கள் இணைந்து ஒரு சொல் நீர்மத்தாய் இயங்குவது தொகை அதாவது கூட்டுச் சொல் எனலாம்.

இவை தவிர, வேற்றுமை உருபுகள், உருபு மயக்கம், இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வட சொல் என்பன செய்யுள் வழக்கு எனவும், ஒரு பொருள் குறித்த பல சொல் (synonyms), பல பொருள் குறித்த ஒரு சொல் (polysemous), இரட்டைக் கிளவி போன்றவையும் சாஸ்திரியரால் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

**நிறைவுரை**

தொல்காப்பியத்திற்கு சாஸ்திரியார் ஆய்ந்து, கூறிய விளக்கங்களிலிருந்து பெறப்படும் செய்திகள்.

1. பெயர், வினை, வேற்றுமை என்னும் சொற்களே அவ் அவ் சொற்களின் இலக்கணமாக அமைவதால் தொல்காப்பியர் பெயர், வினை, வேற்றுமை ஆகியவற்றின் இயல்புகளை நூற்பாக்களின் வாயிலாகச் சுட்டியுள்ளாரே தவிர இலக்கண வரையறை செய்யவில்லை. (Sel explanatory எனலாம்)

2. 'கள்' என்னும் பன்மை விகுதி தொல்காப்பியர் காலத்து அஃறிணை பன்மையாக மட்டுமே வழக்கில் இருந்திருக்கிறது. பின்னாளில் தான் உயர்திணை பன்மையையும் குறித்தது.

3. 'நாம்' என்னும் பெயர் முதலிலே உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாகவும், உளப்படா தன்மைப் பன்மையாகவும் வழக்கில் இருந்திருக்கிறது. நாங்கள் என்னும் உளப்படா தன்மைப் பன்மை பின்னைய வளர்ச்சி.

4. உரிச்சொல் பெயருக்கும் வினைக்கும் உரிய சொல்லாதலின் அதைப் பெயரடை, வினையடை எனக் கொள்ளலாம்.

5. இரண்டும் இரண்டிற்கு மேற்பட்ட சொற்களும் இணைந்து ஒரு சொல் போன்று இயங்குபவை தொகைச் சொற்கள். அவற்றிற்கிடையே உருபுகள் தொக்கும், தொகாமலும் வரலாம்.

ஈண்டு காலங்கருதியும் விரிவு அஞ்சியும் சொல்வகை எனப்படும் பெயர், வினை, உரிச்சொல், இடைச்சொல் பற்றிய சில செய்திகள் மட்டுமே கூறப்பட்டுள்ளன.

## துணைநூற் பட்டியல்


1. Block, Bernard and Trager, George. L., 1942 ***Outline of Linguistic Analysis*** Linguistic Society of America Baltimore

2. Bloomfield, L., 1933 ***Language,*** Henry Holt and Co., New York

3. Hockett, C.F., 1958 ***A Course in Modern Linguistics,*** The Macmillan Company New York

4. Israel, M. 1973 ***The Treatment of Morphology in Tolkappiyam*** Madurai University, Madurai

5. Nida, Eugene, A., 1949 ***Morphology, the Descriptive Analysis of words,*** 2nd ed., Michigan University, Michigan

6. Subramanya Sastri, P.S. 1930 ***Tolkappiyac Collatikarak Kurippu,*** Teppakkulam, Tiruchi

7. ................................ 1936 ***Tamil Molinuul,*** Jegam and Co., Dodson Press, Teppakkulam, Tiruchi

8. ...................... 1945 ***Tolkappiyam Collatikaram*** with an English Commentary, Annamalai University, Annamalai Nagar

# வரலாற்று நோக்கில் இராமேஸ்வரம்

முனைவர் பு. வேம்பரசி
தஞ்சாவூர்

பண்டைக் காலந் தொட்டு இந்தியாவின் வடபகுதியில் வாழ்ந்தவர்கள் இந்தியாவின் தென்கோடியில் அமைந்துள்ள இராமேஸ்வரத்திற்கு வந்து அங்கு எழுந்தருளியுள்ள இராமநாத சுவாமியை வழிபடுவதையும், தென்பகுதியில் வாழ்ந்த தமிழர்கள் வட இந்தியா சென்று அங்குள்ள காசி விஸ்வநாதரை வழிபடுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்ததால் காசி – இராமேஸ்வரம் என்ற சொற்றொடர் பிறந்தது.

இந்திய ஒருமைப்பாட்டைப் பிரதிபலிக்கும் இவ்விரு தலங்களும் 12 ஜோதிலிங்க தலங்களுள் முக்கிய தலங்களாகும்.

இராமேஸ்வரத்திலுள்ள லிங்கமாகிய இராமநாதசுவாமி மணலால் ஆனது. இராமரும் சீதையும் இங்கு வந்து மண்ணில் லிங்கம் செய்து பூஜித்ததாக இராமாயண காவியம் கூறுகிறது.

அகநானூறு மற்றும் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோரின் தேவாரப் பாடல்களும் இராமருடன் இவ்வூரை இணைத்துப் பேசுகின்றன.

இக்கோயிலின் தனிச்சிறப்பு இங்குள்ள 22 தீர்த்தங்கள். இலட்சுமி தீர்த்தம், சாவித்திரி தீர்த்தம், காயத்ரி தீர்த்தம், சரஸ்வதி தீர்த்தம், சேது மாதவி தீர்த்தம், கந்த மாதவன் தீர்த்தம், கவிஸ்த் தீர்த்தம், களதீர்த்தம், நளதீர்த்தம், நீல தீர்த்தம், சங்க தீர்த்தம், சந்திர தீர்த்தம், கங்கா தீர்த்தம், யமுனா தீர்த்தம், ஸத்யாம தீர்த்தம், சர்வ தீர்த்தம், கோடி தீர்த்தம் மற்றும் அக்னித் தீர்த்தம்.

கங்கை நீரைக் கொண்டு வந்து இங்குள்ள சிவனை வழிபட்டால் முக்தி கிடைக்கும் எனச் சிவ புராணம் கூறுகிறது.

இராமேஸ்வரத்தின் மீது பல மன்னர்கள் படையெடுத்து வந்து தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தனர்.

கி.பி. 910இல் இராஷ்டிரக்கூட மன்னர் மூன்றாம் கிருஷ்ணர் இலங்கையை வென்று இராமேஸ்வரத்தைக் கைப்பற்றி வெற்றித்தூண் ஒன்றனையும் அங்கு நிறுவியதாகக் கல்வெட்டுச் சான்று தெரிவிக்கிறது.

கி.பி. 12ஆம் நூற்றாண்டில் ஹொய்சாள மன்னர் விஷ்ணுவர்த்தனன் இராமேஸ்வரத்தின் மீது படையெடுத்து வந்ததாகவும், பராக்கிரம பாண்டியன் மகன் விக்கிரம பாண்டியன் மதுரை அரியணையில் அமர்த்துவதற்காகச் சிங்களப் படை இலங்கை நாயகனின் தலைமையில் இராமேஸ்வரம் இறங்கியதாகவும் ஆர்ப்பாக்கம் கல்வெட்டு கூறுகிறது.

இலங்கை மன்னன் பராக்கிரம பாகுவின் மகன் நிசங்கு மல்லான் என்பவன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தார் என்றும் அவன் இராமேஸ்வரக் கோயிலைப் புதுப்பித்தார் என்றும் செங்கல்பட்டுக் கல்வெட்டு கூறுகிறது. இத்தலத்தைப் புதுப்பிக்க பெருந்தொகை செலவிட்டதால் இவன் பெயரால் இது நிசங்க மல்லேசுவரம் என்று பெயர் பெற்றதாகவும் கூறுகிறது.

ஹொய்சாள மன்னன் மூன்றாம் வல்லாளர் இராமேஸ்வரம் வரை வந்து அங்குள்ள பாலத்தின் நுழைவு வாயிலில் தூண் ஒன்றையும் நிறுவியுள்ளான்.

தமிழகத்தில் முஸ்லீம் சுல்தான்களின் ஆட்சியை அழித்து இந்து சமயத்தையும் இந்து அரசினையும் நிலைநிறுத்திய விஜயநகரப் படைத்தளபதி குமார கம்பனார் கி.பி. 1371இல் இராமேஸ்வரம் வந்து இறைவனை வழிபட்டுள்ளார்.

தஞ்சை மராத்திய அரசைத் தோற்றுவித்த முதலாம் ஏகோஜி காலத்தில் அவருடைய ஒன்றுவிட்ட சகோதரரும் மராட்டி மாவீரனுமாகிய வீர சிவாஜி இங்கு வந்து இராமநாதரை வணங்கிச் சென்றுள்ளார்.

கி.பி. 1549இல் ஐரோப்பியர்களிடையே அதிக மதவெறியுள்ளவர்களும், குறுகிய சமய மனப்பான்மையுடையவர்களுமான போர்ச்சுக்கீசியர் இராமேஸ்வரம் அருகில் மண்ணால் ஆன கோட்டை ஒன்றைக் கட்டி இந்து சமய புனிதப் பயணிகளை ஆலயத்திற்குள் செல்லவிடாது தடுத்து தடைசெய்து உள்ளனர்.

சேதுவின் பதியாகவும், சேதுவின் (இராமேஸ்வரம்) காவலர்களாகவும் திகழ்ந்த இராமநாதபுரச் சேதுபதிகள் கோடிக்கணக்கான தொகையை இவ்வாலயத்திற்குக் கொடையாக வழங்கி இவ்வாலயப் பாதுகாவலர்களாகத் திகழ்ந்துள்ளனர்.

1606ஆம் ஆண்டு செப்புப் பட்டயத்தின் படி இராமேஸ்வரத்திற்கு 5 கிராமங்களையும், 1608 ஆம் ஆண்டு செப்புப் பட்டயத்தின்படி சேதுவின் காவலன் என்றும் அறநிலையத்தின் பாதுகாவலன் என்றும் தன்னைக் கூறிக்கொண்ட திருமலை உடையான் சேதுபதி காலத்தில் இராமேஸ்வர இராமலிங்கேஸ்வர ஆலயம் பழுதுபார்க்கப்பட்டு, கோடித் தீர்த்த மண்டபமும் கட்டப்பட்டது.

தஞ்சை மராத்திய மன்னர்களில் மிகச் சிறந்தவரான இரண்டாம் சரபோஜி சுமார் 3000 பேர் கொண்ட மாபெரும் குழுவுடன் காசிப் பயணத்தை முடித்துவிட்டு, காசிப் பயண மரபுப்படி 1822 மே 9, 10 ஆகிய நாட்கள் இராமேஸ்வரத்தில் தங்கி, காசியிலிருந்து கொண்டுவந்த கங்கை நீரால் சுவாமிக்குத் திருமுழுக்கு செய்தபின் ஆடை, பொன், மணி போன்றவற்றைப் பிராமணர்களுக்குத் தானமாக வழங்கியும், வெள்ளியினால் மன்னர் தம் எடைக்கு எடை துலாபாரம் செய்து அவற்றை எல்லோருக்கும் வழங்கி தானம் செய்தார் என்பதை மராத்திய மன்னர்களின் மோடி ஆவணங்கள் வெளிப்படுத்துகின்றன. மேலும் ஆண்டுக்கு 330 சக்கரம் பூஜைக்கு கொடுக்கப்பெற்று வந்ததையும் மோடி ஆவணம் தெரிவிக்கிறது.

நேபாள பிரதமர் குடும்பத்தைச் சேர்ந்த சாந்தினி என்பவர் இக்கோயில் வாரக் கட்டளை ஒன்று நிறுவியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தலம் இமயம் முதல் சேது வரை பரவி விளங்கும் பாரத நாட்டின் ஆன்மிக ஒற்றுமையை நிலைநிறுத்தும் தலமாக இன்றும் திகழ்கின்றது.

# திருவள்ளுவரின் திறந்த மனம்

திருமதி. இராசம் மரகதம், எம்.ஏ., எம்.எட்
தேசிய நல்லாசிரியை

மனத்தை ஆள்பவன் எவனோ அவன்தான் மனிதன்!
மனமது செம்மையானால் மந்திரங்கள் சொல்ல வேண்டாம்!

இவை சான்றோர் வாக்கு. மனம் போல் வாழ்க! – இது பெரியவர்கள் வாழ்த்து! உள்ளம் பெருங் கோயில்; ஊனுடம்பு ஆலயம்! – இது இறையடியார்களின் அருள்மொழி! இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன? மனம் ஒரு குரங்கு! அது கிளைக்குக் கிளை தாவும்! – இது அனுபவசாலிகள் கூற்று! இதுவும் எதைக் காட்டுகிறது? மனமிருந்தால் மேலே படியுங்கள்!

பொதுவாக நாம் என்ன நினைக்கிறோம்? தப்பு – அதைச் செய்தால்தானே குற்றம்? நான்தான் தப்பே செய்யவில்லையே! என்று நமக்கு நாமே சமாதானம் செய்து கொள்கிறோம் – இல்லையா?

இந்தக் கருத்து வள்ளுவப் பேராசானுக்கு உடன்பாடில்லை! என்ன வியப்பாக உள்ளதா? தப்பு செய்தால் தான் குற்றமா? இல்லை இல்லை! தப்பு செய்ய வேண்டும் என்று மனத்தால் நினைத்தாலே குற்றம் தான் என்று அவர் ஆணித்தரமாக அடித்துச் சொல்கிறார்.

*உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்*
*உள்ளத்துள் எல்லாம் உளன்.*

எவன் ஒருவன் மனத்தால் கூட பொய் சொல்ல வேண்டும் என்று நினைக்கவே கூடாது என்று சத்தியத்தின் பாதையிற் செல்கின்றானோ அவன் உலகத்து மக்கள் அனைவர் உள்ளத்திலும் இருப்பான். ஆமாம் வாயால் வாய்மையும் மெய்யால் மெய்ம்மையும், உள்ளத்தால் உண்மையும் கொண்டு ஒழுக வேண்டும். மனம் மொழி மெய்களால் **தூய்மை காக்க வேண்டும். வாய்மையே வெல்லும்! சத்ய மேவ ஜயதே! சரிதானே!!**

அடுத்து வெகுளாமை என்ற பக்கம் சற்றே திரும்பிப் பார்க்கலாமா?

*உள்ளுவ தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்*
*உள்ளான் வெகுளி எனின்.*

உண்மையிலேயே திருவள்ளுவப் பெருந்தகை ஒரு தெய்வப் புலவர்தான்! ஒருத்தன் மனத்தால் கூட கோபம் கொள்ளாமல் இருந்தால் அவன் என்னென்ன நினைக்கின்றானோ அவையெல்லாம் உடனே அவனுக்குக் கிடைக்கும். எப்படி? என்ன எண்ண வேண்டும்?

நினைவு நல்லது வேண்டும்; நெருங்கின பொருள் கைப்படல் வேண்டும் இது வள்ளுவப் பேராசான் முன்மொழிந்ததை, வழிமொழிந்த பைந்தமிழ்த் தேர்ப்பாகன் பாரதியார் கூறிய கூற்று ! நீ என்ன எண்ணுகிறாயோ – அதுவாகவே ஆகிறாய் ! என்று தானே இந்தியாவின் ஞான தீபம் விவேகானந்தரும் வழிகாட்டுகிறார் !

*எனக்குக் கோபம் வந்தால் என்ன செய்வேன் என்று*
*எனக்கே தெரியாது !*

*எனக்குக் கோபம் வந்தால் மனிதனாகவே இருக்க மாட்டேன் !*

*எனக்குக் கெட்ட கோபம் வரும் தெரியுமா ?*

*எனக்குக் கோபம் வந்து நீ பார்த்ததில்லையே ? இப்பப் பார் !*

இவையெல்லாம் என்ன என்று கேட்கிறீர்களா? சிலர் தம்மைச் சீண்டிப் பார்க்கிறவர்களிடம் பேசும் வீர வசனங்கள் ! ஆக – சினம் அதாவது வெகுளி – அதாவது கோபம் என்பது நம்மை மனிதனாகும் பாதையை விட்டுத் தடம் புரண்டு செல்ல வைத்துவிடும் என்பது தானே நடைமுறை உண்மை ! எனவேதான் பைந்தமிழ்ப் பாட்டி அவ்வையும் ஆறுவது சினம் என்று சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறார் !

அடுத்து கள்ளாமை என்ற தலைப்பிற்குள் நுழைவோமே!

*உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்*
*கள்ளத்தால் கள்வேம் எனல்.*

என்ற குறள் பளிச்சென்று பார்வையில் படுகிறதல்லவா?

அடுத்தவன் பொருளை என் கள்ளத்தால் கவர்ந்து கொள்ளலாமா? என்று மனத்தால் நினைப்பது கூடத் தீங்கு வரும் என்ற எச்சரிக்கைக் குரல் இக்குறட்பாவில் ஒலிக்கின்றதில்லையா?

எல்லாவற்றையும் சேர்த்து ஒட்டு மொத்தமாக - இதுவரை சொல்லப்பட்ட செய்திகளின் சாரம் என்பது போன்ற ஒரு குறள் ! ஆம். அது இதுதான் !

*மனத்துக்கண் மாசி லனாதல் அனைத்தறன்*
*ஆகுல நீர பிற.*

அடடா ! வாழ்கின்ற வாழ்க்கை பொருள் நிறைந்ததாக இருக்க வேண்டுமே ! ஒருத்தன் தன் மனத்தால் மாசற்றவனாக வாழ்ந்தாலே போதும். வேறு அறம் எதுவும் அவன் செய்யவே வேண்டாம் ! மனத்தைப் புதராக வைத்துக் கொண்டு - மாசு நிறைந்ததாக வைத்துக் கொண்டு ஒருத்தன் அறம் செய்வானேயானால் அது வெறும் ஆடம்பரம் தான் ! ஆரவாரம் தான் ! போலி தான் ! – எவ்வளவு தெளிவாக விளக்குகிறார் ?

இதற்கு ஒரே ஒரு சிறிய எடுத்துக்காட்டு பார்க்கலாமே !

கம்பராமாயணத்தில் ஓர் அற்புதமான காட்சி ! சிறையிருந்தாள் ஏற்றம் செப்புகின்ற கவிச்சக்கரவர்த்தி சிலைஇராமன் சீர்த்தியைச் செப்புகின்ற போது, இந்த இப்பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன் என்று செவ்வரம் தந்த வள்ளல் என்று சீதாபிராட்டி வாயாலேயே சொல்ல வைக்கிறார். ஆம். இந்தப் பிறவியிலே இரண்டு பெண்களை என் மனத்தால் கூடத் தொட மாட்டேன் என்று செவ்வரம் தந்த வள்ளல் - அந்த நடையில் நின்றுயர் நாயகன் இராமன் !

மனத்தை எப்படி வைத்துக் கொள்ள வேண்டும் என்று மானுடத்துககு வழிகாட்டுகின்ற வாழ்க்கை நெறியல்லவா இது !

ஒரு வில் ! ஒரு சொல் ! ஓர் இல் என்று வாழ்ந்து காட்டிய வாழ்வல்லவா இராமபிரானுடைய வாழ்வு ! அந்த வழியில் நாமும் நடக்க முயற்சி செய்யலாமே !

# பொறியும் பூதமும்

திரு. ஆறுவிரல் ஐம்பொறி
வீரசோழபுரம்

நிலம், நீர், நெருப்பு, வளி, வானம் – இவை ஐம்பூதங்கள். மெய், வாய், கண், மூக்கு, செவி – இவை ஐம்பொறிகள். ஐம்பூதங்களுக்கும், ஐம்பொறிகளுக்கும் ஏதேனும் தொடர்பு உண்டா? இவ் வினாவிற்கு விடை காண மாணிக்கவாசக சுவாமிகள் இயற்றிய ஒரு பாடலையும், திருமழிசையாழ்வார் இயற்றிய ஒரு பாடலையும் இவண் காணலாம்.

*பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி*
*நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி*
*தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி*
*வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி*
*வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி*
*அளிபவ ருள்ளத் தமுதே போற்றி* – மாணிக்க வாசகர்.

*பூமி லாய ஐந்துமாய்ப்*
*புனற்கண் நின்ற நான்கு மாய்த்*
*தீயி லாய மூன்று மாய்ச்*
*சிறந்த கால் இரண்டுமாய்*
*மீதி லாய தொன்று மாகி*
*வேறு வேறு தன்மையாய்* – திருமழிசையாழ்வார்.

இவ்விரண்டு பாடல்களிலும் பூமி – ஐந்து, புனல் – நான்கு, தீ – மூன்று, கால் – இரண்டு, வான் – ஒன்று என்று ஐம்பூதங்களுக்கும் ஐந்து எண்கள் மட்டுமே கூறப்பட்டுள்ளன. மாணிக்கவாசகர் ஒரு பூதத்திற்கு எந்த எண்ணைக் கூறியுள்ளாரோ அதே எண்ணை அதே பூதத்திற்குத் திருமழிசையாழ்வாரும் கூறியுள்ளார். இவ்விரு பாடல்களிலும் இவ்வொற்றுமை எப்படி நிலவியது? ஐம்பூதங்களுக்கும்,

ஐம்பொறிகளுக்கும் இடையே தொடர்பு உண்டு என்பதையே இவ்விரு பாடல்களும் நமக்கு அறிவிக்கின்றன. எப்படி?

1. வான் என்னும் பூதம், செவியால் உணரும் ஒலி ஒன்றை மட்டுமே உணர்த்தும். ஆகவே இவ்விரு பாடல்களும் வானுக்கு ஒன்று என்ற எண்ணைப் பகர்ந்துள்ளன.

2. வளி என்னும் பூதம், செவியால் உணரும் ஒலி உடலால் உணரும் தொடு உணர்வு ஆகிய இரண்டையும் உணர்த்துகின்றது. ஆகவே இவ்விரு பாடல்களும் வளிக்கு இரண்டு என்ற எண்ணைப் பகர்ந்துள்ளன.

3. தீ என்னும் பூதம், செவியால் உணரும் ஒலி, உடலால் உணரும் தொடு உணர்வு, கண்ணால் உணரும் உருவம் ஆகிய மூன்றையும் உணர்த்துகின்றது. ஆகவே இவ்விரு பாடல்களும் நெருப்புக்கு மூன்று என்ற எண்ணைப் பகர்ந்துள்ளன.

4. நீர் என்னும் பூதம், செவியால் உணரும் ஒலி, உடலால் உணரும் தொடு உணர்வு, கண்ணால் உணரும் உருவம், நாவால் உணரும் சுவை ஆகிய நான்கையும் உணர்த்துகின்றது. ஆகவே இவ்விரு பாடல்களும் நீருக்கு நான்கு என்ற எண்ணைப் பகர்ந்துள்ளன.

5. மண் என்னும் பூதம், செவியால் உணரும் ஒலி, உடலால் உணரும் தொடு உணர்வு, கண்ணால் உணரும் உருவம், நாவால் உணரும் சுவை, மூக்கால் உணரும் மணம் ஆகிய ஐந்தையும் உணர்த்துகின்றது. ஆகவே இவ்விரு பாடல்களும் மண்ணுக்கு ஐந்து என்ற எண்ணைப் பகர்ந்துள்ளன.

இவ்விருவரும் ஐந்து எண்களைக் கொண்டே ஐம்பொறிகளை நமக்கு சுருங்கக் கூறி விளங்க வைத்துள்ளனர். ஐந்து பூதங்களையும், ஐந்து எண்களையும் கூறிய இவ்விரு பாடல்களிலும் கூறப்படாத ஐம்பொறிகள் எண்களில் மறைந்துள்ளதை அறிகின்றோம்.

இதனால் தமிழ் மொழியின் அருமையும் பெருமையும், புலமையும் வளமையும், வன்மையும், திண்மையும் தெரிகின்றதன்றோ.

# பயங்கரவாதத்தை எதிர்கொள்ள ஒருங்கிணைந்த அணுகுமுறை




இந்த முக்கிய மாநாட்டிற்கு உங்கள் அனைவரையும் உள்ளன்போடு வரவேற்கிறேன். உங்களுடன் கலந்துரையாடுவதில் பெருமகிழ்வு கொள்கிறேன். இந்தக் கூட்டத்தின் அவசியத்தை வலியுறுத்திக் கூறத் தேவையில்லை. நமது உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு விடப்பட்டுள்ள சவால்கள் குறித்து கவனமாக பரிசீலித்த கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாகும். இந்த மாநாடு, கருத்துப் பரிமாற்றங்களுக்கு நல்ல அரங்கமாக திகழ்வதுடன், நமது உள்நாட்டுப் பாதுகாப்பின் பல்வேறு அம்சங்கள் குறித்து பொதுவான கருத்தை உருவாக்க வழிவகுக்கும் என்று நான் நம்புகிறேன்.

**அமைப்பு ரீதியிலான நடவடிக்கை**

இந்த ஆண்டு கடந்த ஜனவரியில் நாம் கூடியபோது, பல்வேறு நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து பல்வேறு பணிகள் செயல்படுத்தப் பட்டுள்ளன என்பதைக் குறிப்பிட மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இக்கூட்டத்தில் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட குறிக்கோள்களை எட்டுவதற்காக, அமைச்சர் திரு. ப. சிதம்பரம், முழு மூச்சுடன் பணியாற்றியதற்காக அவரை வெகுவாகப் பாராட்டுகிறேன். தேசிய பாதுகாப்பு அணியின் 4 - மண்டலப் பிரிவுகள் அமைக்கப்பட்டு, இவை, மும்பை, கொல்கத்தா, சென்னை, ஹைதராபாத் ஆகிய நான்கு

இடங்களில் செயல்படத் தொடங்கியுள்ளன. தேசிய புலனாய்வு முகமை ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத்திற்கு எதிரான நமது போராட்டத்தில் இந்த அமைப்பு சிறந்த முறையில் செயலாற்ற சாத்யமான ஒத்துழைப்பை முழுமையாக நல்குமாறு முதல் அமைச்சர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

உள்நாட்டுப் பாதுகாப்பு பற்றிய மாநில முதல் அமைச்சர்களின் மாநாட்டை 2009ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17ம் தேதி பிரதமர் துவக்கி வைத்து உரையாற்றினார்.

பயங்கரவாதிகள் திடீரென்று தாக்குதலை மேற்கொள்ளும் பொழுது, விரைந்து உடனடியாக செயல்படும் திறமையை மேம்படுத்துவதற்காக மாநிலங்கள் அளவில் அதிரடிப்படை அணிகளையும், சிறப்பு பாதுகாப்பு குழுக்களையும் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. புலனாய்வு தகவல்களை சேகரிப்பதாலும், மத்திய மாநில நிலைகளில் இந்தத் தகவல்களை பரிமாறிக் கொள்வதிலும் செயல்பாட்டை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சிறந்த முறையில் வரையறுக்கப்பட்ட கடலோரக் காவல்படை பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது. ஆனால் நாம் இன்னும் ஆற்ற வேண்டிய பணிகள் நிறைய உள்ளன. நாம் அவற்றை வெற்றிகரமாக செயல்படுத்துவோம். நவீன உத்திகளுடன் தாக்குதலை மேற்கொள்ளும், பயங்கரவாதிகளும் இடதுசாரி தீவரவாதிகளும், விடுக்கும் சவால்களை புதிய அணுகுமுறையாலும் தீர்க்கமான நடவடிக்கையாலுமே எதிர்கொள்ள இயலும். இந்தத் தீய சக்திகளை முறியடிப்பது அவசியமென்றாலும், அவர்களை வெற்றிகொள்ள, எதிர்பார்ப்போடு பணியாற்றுவது அவசியமாகும்.

நன்றி : உள்நாட்டுப் பாதுகாப்பு குறித்து 17-08-09 அன்று நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் பிரதமர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.

# நற்றிணையில் மலர்கள் வழி அறியலாகும் சிந்தனைகள்

த. செந்தமிழ்ச் செல்வன் எம்.ஏ., எம்.பில்.
முனைவர், பட்ட ஆய்வாளர்

பண்டைய தமிழர் வாழ்வில் முதற்பொருளாகக் கொள்ளப்படுபவை நிலமும் காலமும் ஆகும். நிலம் ஐவகைத் திணையாகி ஐவகைத் திணைகளும் குறிஞ்சி, மருதம், பாலை, முல்லை, நெய்தல் என மலர்ப் பெயர்களைத் தாங்கி நிற்றல் தமிழிலக்கிய இலக்கண மரபினதாகும். 1 பண்டைய தமிழ்மக்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர். அவர்களது வாழ்க்கைமுறை இயற்கையிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாத அளவிற்கு இயைந்து இருந்தது. சங்கப் பாடல்கள் பல இயற்கையின் பின்னணியில் எழுதப்பட்டன. எட்டுத்தொகை நூல்களில் முதலாவதாக அமைந்திருப்பது நற்றிணை. சங்ககால மக்களின் வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டும் இலக்கியங்களில் ஒன்றாகவும் மலர்களோடு இணைந்த மக்களின் வாழ்வியலைக் காட்சிப்படுத்தும் இலக்கியமாகவும் நற்றிணை திகழ்கின்றது. பல வண்ண மலர்கள் பல்வேறு நிலைகளில் புலவர்களால் எடுத்தாளப் பெற்று, இலக்கியச் சோலையில் பூத்துக் குலுங்கி அழகும் மணமும், இன்பமும் ஊட்டுவனவாகவும் நம்மைக் களிக்கச் செய்கின்றன.

பூ என்னும் சொல் அல்லது மலர் என்னும் சொல் அழகு, மலர்ச்சி ஆகிய பொருள்களைத் தருகின்றது. அரும்பாகி, போதுமாகி, அன்றலர்ந்த, மலராகி, நாண்மலர் என்றும் செம்மலர் என்றும் போற்றப்படும் மலர்களில் தெய்வங்கள் உறைவதாக உணர்ந்து ஒவ்வொரு தெய்வத்திற்கும் உகந்த மலர்களைப் பற்றியும் பக்தி இலக்கியங்கள் பேசுகின்றன. சங்க இலக்கியங்கள் பூக்காடுகளாகத் திகழும் பாங்கு அறியத்தக்கது. அதிலும், குறிஞ்சிப் பாட்டில் கபிலர் வகைப்படுத்தும் 99 மலர்களின் பட்டியல் குறிப்பிடத்தக்கது.

பல நிறங்களைக் கொண்ட வாசமுள்ள மலர்கள் நற்றிணையில் மக்கள் விருப்பங்களோடு கலந்து வாழ்வியலோடு இணைந்து மணம் பரப்பிப் பயன் தருகின்றன. கொத்து கொத்தாகப் பூத்துக் குலுங்கும் மலர்களும் உண்டு. அவற்றின் நிலைக்குத் தக்கவாறு அவை பெயர் பெறும்.

*வாங்குசினை மருதத்துத் தூங்கு துணா (நற் 350)*

என்னும் வரியில் இச்செய்தி கூறப்படுகின்றது.

**காந்தள்**

மெல்லிய விரல்களுக்குக் காந்தள் மலரை ஒப்புவமையாகப் புலவர்கள் பாடியுள்ளனர். இதன் நுனி சிவந்திருக்கும் காந்தள் மலர் விரியும் போது இரத்தம் தோய்ந்த யானைத் தந்தம் போலக் காட்சியளிப்பதாகப் பின்வரும் நற்றிணை வரிகள் தெரிவிக்கின்றன.

*கொன்ற யானைக் கோட கண்டன்ன*
*செம்புடைக் கொழுமுகை அவிழ்ந்த காந்தள் (நற் 294)*

இம்மலரின் இதழ்கள் நீண்டு அமைந்துள்ளதால் மலர்ந்த பின்பு, கையை விரித்தது போலத் தோன்றும். மேலும், இம்மலர் தெய்வத்தன்மை கொண்டதாக இருப்பதால் வண்டுகள் மொய்ப்பதில்லை என்ற கருத்தும் உண்டு. மேலும், தும்பியினம் இம்மலரில் அமர்ந்து தேன் உண்டால் அதனுடைய சிறகுகள் உதிர்ந்து விடுமாம். மலர்ந்த காந்தளினது மலரை, இது தெய்வத்திற்கு உரியதென்று அறிந்தும் அதன்பால் நின்றும் நீங்காமல் ஊதியது தும்பி...என்று உ.வே.சா. குறிப்புரை தருகின்றார். (பதிற்றுப்பத்து, 67.19) மலர்ந்துள்ள காந்தள் மலரைப் பாம்பு படமெடுத்தாற் போலவும், மலரிதழ்கள் வாடிய காட்சி பாம்பு பை அவிழ்ந்தது போலவும், வளை கையினின்றும் விழுவது போலவும் உவமைப் படுத்தப்பட்டுள்ளது.

**அரும்பு மலர்**

அரும்புமலர் கடற்கரை ஓரங்களிலும், கரைகளிலும் படர்ந்திருக்கும். அதன் வடிவம் குதிரையின் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் மணியைப் போன்றதாகும். நிறத்தில் வெண்மையாகவும்

மொட்டுக்களின் மீது மெல்லிய வரிகளைக் கொண்டும் வளரும் அதிரல் மலரினைக் காட்டுமல்லிகை என்றும், புனலிக்கொடி என்றும் இலக்கியங்கள் சுட்டுகின்றன. அரும்பு மலரைப் போரில் ஈடுபடுத்தப்படும் குதிரைக்கு உவமையாகக் காட்டியிருப்பது சுவைக்கத் தக்கது. பின் வரும் நற்றிணையின் பாடல் வரிகள் இதனை உணர்த்தி நிற்கின்றன...

*இருங்கழி பொருத ஈரவெண் மணல்*
*மாக்கொடி அரும்பின் மாயிதழ் அலரி*

(நற். 137)

**வேங்கை**

சங்க இலக்கியங்களில் பரவலாகக் கையாண்டுள்ள மலர் வேங்கையாகும். மலைச்சாரலிலும், வீட்டு முற்றங்களிலும் மஞ்சள், சிவந்த நிறங்களில் பூத்துக் குலுங்கும் வேங்கை, பொன்னிணர் வேங்கை, கருங்கால் வேங்கை என்றும் குறிப்பிடப்படுகின்றது. இதன் மொட்டு கடுமையான இருண்ட நிறத்துடன் விளங்குவதை, காரரும்பு அவிழ்ந்த கணிவாய் வேங்கை (நற் 373) என்று பாடல் சுட்டுகின்றது.

**தாழை**

தாழையானது கடற்கரைப் பகுதிகளில் வளரக்கூடியதாகும். தாழைப்புதரில் நாகங்கள் வசிக்கும் என்பர். இளவேனிற் காலத்தில் இம்மலர்கள் மிகுதியாக இருக்கும். பின்வரும் நற்றிணையின் பாடல் வரிகள் இலை, மடல், தோடு என்று பட்டியலிடுகின்றன.

*தடந்தாள் தாழை முள்ளுடை நெடுந்தோட்டு*
*அகமடற் பொதுளிய முகைமுதிர் வான்பூ*
*கோடுவார்ந் தன்ன வெண்பூந் தாழை*
*எறிதிரை உடைத்தலிற் பொங்குத் தாது சோர்பு*
*சிறுகுடிப் பாக்கத்து மறுகுபுலால் மறுக்கும்*
*மணங்கமழ் கானல்.......* (நற் 209)

**தழையுடை**

பூக்களால் ஆடை செய்து உடுத்திக் கொண்டதையும் அது தழையுடை என்று வழங்கப்பட்டதையும், வயலைக்கொடி, நொச்சியிலை, வேங்கையிலை ஆகியவற்றால் தழையுடை செய்யப்பட்டதையும், அம்பகை நெறித்தழை, முழுநெறித்தழை என்ற பெயர்களில் அழைக்கப்பட்டதையும் நற்றிணைப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. முழுநெறித்தழை என்பது முழுப்பூக்களால் தைக்கப்பட்ட தழையாடை ஆகும். இதனை,

*தழையும் தாரும் தந்தனன் இவன் (நற். 290)*

என்று தலைவன் தலைவிக்குத் தழையாடை நெய்து கொடுத்ததை நற்றிணை பேசுகிறது.

**தாமரை**

தாமரை மலர் பக்தி இலக்கியத்தில் பெரிதும் போற்றப்படுகின்றது. தாமரை புரையும் காமர் சேவடி என்றும், கலைமகள் வீற்றிருந்து அருள்பாலிக்கும் இடமாகவும் திகழும் பெருமை பெற்ற மலராகும். சோலைகளில் மலர்ந்துள்ள மலர்களைப் பறிக்க வரும் இளம்பெண்கள் வளைகள் ஒலிக்க, இழைகள் அசைய, களிப்புப் பொங்கப் பூக்கொய்கின்றனர்.

*சிறுவீ ஞாழல் தேன்தோய் ஒள்ளிணர்*
*நேரிழை மகளிர் வார்மணல் இழைத்த*
*வண்டற் பாவை வனமுலை முற்றத்து*
*ஒண்பொறிச் சுணங்கின் ஐதுபடத் தாவும் (நற் 191)*

என்ற நற்றிணைப்பாடல், இளம்பெண்கள் மலர்களைக் கொய்வதற்காகச் செல்வதையும், மலர் கொய்வதையும், பாவை நோன்பிற்காகக் கடற்கரையில் பாவைசெய்து பூச்சூடி விளையாடுவதையும் கண்களுக்கு விருந்தாக்குகின்றது.

**முல்லை**

முல்லை மலரானது காட்டுப்புறங்களில் வளரும் கொடி வகையைச் சார்ந்த பூவாகும். கார்காலத்தில் அதுவும் மாலை நேரத்தில் மலர்வதாகும். பின்வரும் புறப்பாடல் இதன் சிறப்பை விளக்கி நிற்கின்றது.

*முல்லை அரும்புவாய் அவிழும் பெரும்புன்மாலை*

என்ற பாடல் வரியில் இடம்பெற்றுள்ளது. காட்டுப் பூனையின் பற்களைப் போன்று காட்டில் முல்லை அரும்பி இருந்ததை,

*பிள்ளை வெருகின் முள்ளெயிறு புரையப்*

*பாசிலை முல்லை முகைக்கும் (புற 117)*

என்ற அடிகள் சுட்டுகின்றன.

**மஞ்சள் நிறம்கொண்ட மருதப்பூ**

மஞ்சள் நிறம்கொண்ட மருதப்பூ நீர்ப்பெருக்கான இடங்களிலும் வயல்களின் ஓரங்களிலும் வளரும் தன்மை உடையது. மரத்திலிருந்து மிக எளிதில் உதிர்ந்துவிடும் தன்மை கொண்ட மருதமலர் பறவைகள் பறக்கும் வேகத்திலேயே உதிர்ந்துவிடும் என்பதை,

*பழனப் பல்புள் இரியக்கழனி வாங்குசினை*

*மருதத் தூங்க்குதுணர் உதிரும் (நற். 356)*

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

**நெய்தல் மலர்**

மகளிரின் நலம்பெற்ற அழகிய குளிர்ந்த கண்களுக்கு நெய்தல் மலர் உவமையாகக் கூறப்படும். கருநீலமுடைய நெய்தல் மலர் கழனிகளில் வளரும். இதன் காம்பு திரட்சியுடையதால் பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்... என்று சுட்டப்படும். மிகுந்த தேனையும் நறுமணத்தையும் கொண்ட இதன் இதழ் வேல் வடிவில் இருக்கும்.

*ஆய்மணிப் பொதிஅவிழ்ந் தாங்கு நெய்தற்*

*பல்லிதழ்ப் பொதிந்த பூத்த மிதிக்கும் பரதவர் (239)*

என்ற பாடல் அடிகளில் பரந்து விரிந்துள்ள இம்மலர்க்கூட்டத்தின் காட்சி, நீலமணி நிறைந்த பொதியை அவிழ்த்து விட்டாற் போலிருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

வீட்டினை அழகுபடுத்துவதற்காக மலர்களைக் கட்டி அணிசெய்த செய்தி,

*ஒண்ணுதல் மகளிர் ஓங்கு கழிக்குற்ற*
*கண்ணேர் ஒப்பின் கமழ்நறு நெய்தல்*
*அகல்வரிச் சிறுமனை அணியும் (நற் 283)*

என்ற பாடலடிகளில் காணக்கிடக்கின்றது.

**முடிவுரை**

பொதுவாகச் செடி கொடி மரங்கள் மண்ணிலே வேரூன்றியிருப்பினும் விண்ணோக்கியே வளர்தலைக் காணலாம். அது போலவே மக்களும் புறத்தே உலகியற் பொருளியல் வாழ்விலே தோய்ந்து நிற்பினும் அவர்கள் தம் வாழ்வின் குறிக்கோளைச் சிந்தித்துச் செயல்படுதல் வேண்டும். மனிதன் தன்னைச் சுற்றியுள்ள தாவரங்களுடன் தொடர்பு கொண்டிருக்கின்றான். அதிலும் தாவரங்களில் வளர்ச்சியில் மலர்ச்சியின் அடையாளமாக மலர்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறான். அதன் மூலம் தன் வாழ்க்கைச் சிந்தனைகளை வெளிப்படுத்தியிருக்கிறான் என்பது நமக்குப் புலப்படுகின்ற செய்தியாகும்.

**குறிப்புகள்**

1. வைத்தியலிங்கன் செ. தமிழ்ப் பண்பாட்டு வரலாறு ப 243
2. ஜெகதீசன் இரா. முனைவர் தொ.ஆ. நற்றிணை ஆய்வுக்கோவை ப.828

# பட்டினத்தாரின் இறைச் சித்தாந்தம்

செல்வி இரா. கவிதா
முனைவர் பட்ட ஆய்வாளர்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

## முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் பல துறை சார்ந்த படைப்புகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. படைப்பின் பயன், சமூகத்திற்குப் பயனுள்ள ஏதேனும் ஒரு கருத்தை மட்டுமாவது சொல்ல வேண்டும். அழகியல் உணர்வு மட்டும் படைப்பின் நோக்கமல்ல. அழகியல் உணர்வோடு சமூகக் குறைகளைக் களையும் உபாயத்தையும் சேர்த்துத் தருவதில் தான் படைப்பின் முழு வெற்றியும் அடங்கியிருக்கிறது. அவ்வகையில் இலக்கிய வகைமைகளில் **'சித்தர் இலக்கியங்கள்'** இப்பணியைச் செவ்வனே செய்திருக்கின்றன எனலாம். சமயப்பூசல் அழிய வேண்டும். **'ஓரிறைக் கொள்கையை'** அனைவரும் பின்பற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்ட, பதினெண் சித்தர்களில் ஒருவரான **'பட்டினத்தாரின் இறைச் சித்தாந்தத்தை'** வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## சித்தர்கள்

சித்தர்கள் என்ற சொல்லுக்கு இன்றளவும் புதுப்புது விளக்கங்கள் தரப்படுகின்றன. அவை, யாவுமே சித்தர்களுக்குச் சாலப் பொருந்தும் வண்ணம் அமைந்துள்ளன. 'நம் நாட்டுச் சித்தர்கள்' என்ற நூலின் ஆசிரியரான இரா. மாணிக்கவாசகம், 'சமயம் என்ற எல்லைக்குள் நின்று கொண்டு சிவனைப் பாடிய பக்தர்கள் சைவர் எனப்பட்டனர். சிவனைப் பாடிய யோகியர் சித்தர்கள் எனப்பட்டனர்' என்கிறார். 'கடவுளைக் காண முயல்கின்றவர்கள் பக்தர்கள் என்றால் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள்' என்கிறார் தெ.பொ.மீ.

'பொறி புலன்களை அடக்கி அபரஞானம் எனப்படும் உலகம் பற்றிய அறிவைக் கடந்து இறையியல்பு பற்றிய பரஞானத்தை அடைந்த ஞானிகள் நாடு, காடு என்ற வேறுபாடு இன்றி எந்த இடத்திலும் தனித்து நின்று வாழப் பழகியவர்கள். நன்மை - தீமை, ஒளி - இருள். சூடு - குளிர்ச்சி, இன்பம் - துன்பம் என்னும் இரட்டைகளிலிருந்து விடுபட்டு இவற்றில் வேறுபாடு காணாமல் இரட்டைகளை ஒன்றாகவே கண்டதால் சமநோக்காளர் எனக் கூறப்பெற்றனர்' என்று சித்தர்களின் தன்மைப் பற்றிய மிக நீண்ட விளக்கத்தை அ.ச. ஞானசம்பந்தன் தருகிறார்.

இவ்வாறு, 'சித்தர்' என்ற சொல்லுக்குப் பல்வேறு அறிஞர்கள் பொருள் விளக்கம் தந்தாலும் வரம்பிலா அறிவும் மரணமில்லாப் பெருவாழ்வும் கொண்ட மீமானுடச் சக்தியே சித்தர் என நாம் கொள்ளலாம்.

**பட்டினத்தார்**

இவரது இயற்பெயர் திருவெண்காடர். காவிரிபூம்பட்டினத்தில் செல்வ வளமிக்க வைசியர் குடும்பம் இவருடையது. இவரது மனைவி சிவகலை. தம்பதியர் தம்பிரான் பக்தர்கள். கொடையுள்ளம் கொண்ட வள்ளல்கள். இவரை, ஊர்மக்கள் **'காவிரிபூம்பட்டினத்தார்'** என்று மரியாதையாக அழைத்தனர். பிள்ளைப்பேறு இல்லாமல் மனம் நொந்த இவர்கள் வருத்தம் தீர்க்க, சிவபெருமானே பிள்ளையாக வந்ததாகக் கூறுவர். அப்பிள்ளைக்கு மருதவாணன் எனப் பெயரிட்டு வளர்த்தனர். மருதவாணன் கடல் கடந்து, வாணிகஞ் செய்து விட்டு, மூட்டை மூட்டையாக வரட்டியும், அவலும் கொண்டுவந்தது கண்டு, ஆத்திரமுற்ற திருவெண்காடர், மகன் மருதவாணனைத் தண்டிக்க, மகன் வடிவில் வந்த சிவன் அவருக்குக் காட்சியளித்து ஞானம் பெறச் செய்தார். 'காதற்ற ஊசியும் வாராதுகாண் கடைவீதி வழிக்கே' என்ற உண்மை உணர்ந்த அக்கணமே, மனைவி, மனை அனைத்தையும் துறந்து பட்டினத்தாராய் வாழ்ந்து சிவத் தொண்டாற்றியதாகக் கூறுவர்.

### இறைமைக் கோட்பாடு

'அறிவியல் பாங்கில் நிரூபிக்கப்படாத ஒரு கருத்தை, நம்பி ஏற்பதன் மூலம் பல நூறு பிரச்சனைகட்குத் தீர்வுகாண முடியும் என்ற போது அத்தகைய நம்பிக்கையை ஏற்கத்தான் வேண்டும்' என்று செருமானியத்தத்துவ அறிஞர் இம்மானுவேல் காண்ட் கூறுகிறார். சித்தர்கள் இறையை அணுகும் முறை வேறுபட்டது.

### இறைவன் உண்டா? இல்லையா?

நாகரிகம் தோன்றிய காலம் தொட்டு தத்துவ அமைப்புகளும், சமயங்களும் இறைவன் பற்றிய விளக்கங்களைத் தந்து கொண்டிருக்கின்றன. இறைத்தத்துவவாதிகள் 'இறைவன் உண்டு' என வாதிட, இறைமறுப்புத் தத்துவவாதிகளோ, 'இறைவன் இல்லை' என்றும் அதற்கான விளக்கங்களையும் தருகின்றனர்.

இப்பிரபஞ்சத்தில் எல்லாப் பொருட்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் காரண - காரியத் தொடர்புண்டு. எல்லாவற்றுக்கும் தொடக்கமாய் இருப்பவன் இறைவன். ஒவ்வொரு படைப்பிற்கும் நிகழ்ச்சிக்கும் ஏதோ குறிக்கோள் இருக்கின்றது. அக்குறிக்கோளை அடைய அதாவது, அக்குறிக்கோளை நோக்கி இயங்குவதற்கு ஒரு சக்தி கண்டிப்பாக வேண்டும். அச்சக்தியே, இறைவன் என்பது ஆன்மிகவாதிகளின் கருத்து.

கடவுள் மறுப்பு வாதங்களோ, இறைவனால் படைக்கப்பட்ட இவ்வுலகில் காணப்படும் கொடுமைகளும் மக்களினம் அனுபவிக்கும் துன்பங்களும் ஏற்படக் காரணம் என்ன? என வினாயெழுப்புகின்றன. உலகைப் படைத்த கடவுள் மக்களுக்கு இனிய வாழ்வை மட்டும் தந்திருக்கலாமே ! ஏன் புயல், பூகம்பம், ஆழிப்பேரலை, வெள்ளம், வறட்சி, வறுமை போன்ற இயற்கைக் கொடுமைகளையும், உடல் சார்ந்த மனம் சார்ந்த நோய்களால் ஏற்படக்கூடிய துன்பம் நிறைந்த வாழ்வையும் தரவேண்டும்? என வாதிட்டு கடவுள் நம்பிக்கையைத் தளர்த்துகின்றன.

கற்காலம் முதல் இக்காலம் வரை தொடர்ந்து வரும் இவ்வாதங்கள் வருங்காலத்திலும் தொடரலாம். இச்சமூகச் சிக்கலை அகற்றும் பொருட்டாய் சித்தர்கள் இறைக்கொள்கையை வேறொரு கோணத்தில் கையாள்கின்றனர். இவர்கள் கடவுள் உண்டா? இல்லையா? எனும் வீண் ஆராய்ச்சியில் ஈடுபட்டு காலம், பொருள், சக்தி இவற்றை விரயம் செய்யாமல் இறை இன்பத்தை வெட்டவெளியில் துய்த்தனர். நம்மையும் அவ்வழியே அறிவுறுத்துகின்றனர். இறையுண்மையை ஏற்றுக்கொள்ளும் சித்தர்கள் அதற்கான காரணத்தையோ, விளக்கத்தையோ கூறியிருக்கவில்லை. சட்டம் ஒழுங்கு அமலில் இல்லாத ஊரில் அமைதி இருக்காது. அதுபோல இறையில்லா உலகில் பிறர்நலம் பேணும் குணம் இருக்காது என்ற எண்ணம் கூட காரணமாய் இருக்கலாம் என நாம் கொள்ளலாம்.

**சிவனே பரம்பொருள்**

சித்தர்கள் பெரும்பாலானோர் சிவனையே பரம்பொருளாய் கொண்டாடினர். முழுமுதற்சித்தரான 'திருமூலரின் திருமந்திரம்' சைவசமயத் திருமறைகளுள் வைத்து சிறப்பிக்கப்படுகின்றது. ஆனால், சித்தர்கள் அனைவரும் சைவ சித்தாந்திகள் என்று கூறவியலாது. சிலர் அம்பிகையையும், திருமாலையும், நந்தீசர், சரசுவதி போன்றோரையும் வழிபட்டதாகப் பாடல்களில் தெரிகின்றது.

பட்டினத்தார் சைவ சமய சித்தராகவே காட்சியளிக்கிறார். சைவ சமய வழிநின்ற அவர் இறைவனாம் சிவனை அவரது பண்புகளையே பெயராய் விளிக்கிறார். 'கோயில் திரு அகவலில்' சிவனை, செம்பொன் அம்பலவன், முதல்வன், தில்லையில் முளைத்தெழும் சோதி, அம்பலத்தரசன், ஆனந்த கூத்தன் எனப் பெயரிட்டு அழைக்கிறார். இதைப் போலவே, ஒவ்வொரு திருத்தலத்தையும் பாடுகையில் இவ்வாறு பல்வேறு பெயர்களால் விளிக்கிறார். பெயர்கள் பலவாயினும் அவை யாவும் 'சிவபெருமான்' எனும் ஓரிறையையே குறிக்கிறது.

**அரூபமானவன்**

இறைவன் உண்டென்றால் அவன் எப்படி இருப்பான்? எங்கே இருப்பான்? என்று தருக்கவாதிகள் வினாத்தொடுப்பர். அதற்குப் பதிலாகத்தான் பட்டினத்தார்,

> *"தூரும் தலையும் இலான்; தோற்றம் ஒடுக்கம் இலான்;*
> *ஆரும் அறியாமல் அகண்டமாய் நின்றாண்டி!"*

என்றும்,

> *"வாக்கும் மனமும் வடிவும்இலா வான்பொருள் காண்!*
> *போக்குவரவும் இலான்; பொருவரிய பூரணன் காண்!"*

என்றும் கூறி இறைவன் வடிவங்கட்கும் உருவங்கட்கும் அப்பாற்பட்டவன் என்று உணர்த்துகிறார்.

இறைவனை உணர வேண்டுமேயன்றி வாதம் செய்தல் ஆகாது என்கிறார். இதனை,

> *"நூலால் உணர்வரிய நுண்மையினும் நுண்மையன் காண்*
> *பாலூறு சர்க்கரை போல் பரந்த பரிபூரணன் காண்"*
>
> *"கல்லுள் இருந்த கனல் ஒளிபோல்..."*
>
> *"பொற்பூவின் வாசனைபோல்...."*

போன்ற பாடல்கள் வழி இறைவன் உணர்ந்து கொள்ளக்கூடியவன் என்று கூறுகிறார். மேலும்,

> *"சொல்லாலே சொல்லுதற்குச் சொல்லவாய்*
> *இல்லையடி!*
> *எல்லாரும் கண்டிருந்தும் இப்போது அறியார்கள்!"*

என்ற பாடல்வழி சொல்லில் அடங்காதவன் இறைவன் என்கிறார் பட்டினத்தார்.

**நிலையானவன்**

இந்த உலகமும் உலகில் நாம் காணும் பொருட்களும், இவ்வுடலும், உயிரும், செல்வமும், உறவுகளும் ஆகிய அனைத்தும் அழிந்து போகும் தன்மையன. ஆனால் இறைவன் ஒருவனே உயிர்கட்கு நிலைத்த உறவினன். இதனைச் சித்தர்,

**"ஊருஞ்சதமல்ல; உற்றார் சதமல்ல; உற்றுப்பெற்ற பேருஞ்சதமல்ல; பெண்டீர் சதமல்ல ; பிள்ளைகளும் சீருஞ்சதமல்ல; செல்வம் சதமல்ல; தேசத்திலே யாருஞ்சதமல்ல; நின்தாள் சதம் கச்சி ஏகம்பனே"** எனப் பாடுகிறார்.

**சூத்திரதாரியானவன்**

எல்லாவற்றிற்கும் முழுமுதல் காரணன் இறைவன். உலகப் பொருட்களைப் படைத்து, காத்து, இயக்கி, அழிக்கும் அனைத்துச் செயல்களுக்கும் அடிப்படை இறைவனே. "எல்லா உலகும் எல்லா உயிர்களும் எல்லாப் பொருட்களும் என்னறிய வல்லாளன் ஆதி பரமசிவனது செயலால் ஆகும்" என்னும் எண்ணம் கொண்ட பட்டினத்தார் மனிதன் இறைவனாகிய சூத்திரதாரியால் ஆட்டுவிக்கப்படும் பாவைகளே என்கிறார். மனிதனை எண்ண வைப்பதும், இயங்க வைப்பதும் இறைவன் செயலே. அன்றாட செயல்களிலும் இறைவனே மனிதனை ஆட்டுவிக்கின்றார். இதனை,

*"ஊட்டுவிப்பானும் உறங்குவிப்பானும் இங்கு*
*ஒன்றோடொன்றை*
*மூட்டுவிப்பானும் முயங்குவிப்பானும் முயன்றவினை*
*காட்டுவிப்பானும் இருவினை பாசக்கயிற்றின் வழி*
*ஆட்டுவிப்பானும் ஒருவன் உண்டே தில்லை அம்பலத்தே"*

என்ற பாடல்வழி புலப்படுத்துகிறார்.

**பிரளயத்தலைவன்**

சிவனை வணங்கும் சித்தர்களே, இரட்டைகளைக் கடந்து அட்டமா சித்துகளும் கைவரப் பெற்றவர்கள் எனில், சித்தர்களின் தலைவன் சிவபெருமான் எப்படிப்பட்ட பேராற்றல் உடையவனாய் இருப்பான் என்பதை உணர்த்தும் பொருட்டு,

*"அஞ்சப் பிரளயத்து மிஞ்சி இருப்பான்டி*
*நஞ்சு பொதிமிடற்றான் நயனத்து அழல் விழியன்"*

எனப் பாடுகிறார்.

### வழிபடு முறைமை

இறைவன் ஒருவனே எனும் கருத்துறுதி கொண்ட சித்தர்கள் உருவ வழிபாட்டை மறுத்தனர். பட்டினத்தாரும் கடவுளைக் கல்லில் தேடும் மூடத்தனத்தை வெறுத்தார். இதனை,

*"உளியிட்ட கல்லையும் ஒப்பிட்ட சாந்தையும் ஊத்தையறப்*
*புளியிட்ட செம்பையும் போற்றுகிலேன் உயர் பொன்னவனே"*

*"கல்லிலும் செம்பிலுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே"*

போன்ற பாடல்களின் வழி அறியலாம். மேலும் மனத்தால் செய்கின்ற இறைவழிபாடே சிறந்ததென்பது இவர்தம் ஆணித்தரமான கருத்தாகும். மந்திரம், வேதம், வெற்றான புறச் சடங்குகள் இவையாவும் பயனற்றவை என்கிறார்.

**"வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம் வேறொருவர்க்கு எட்டாத புட்பம் இறையாத தீர்த்தம் இனி முடிந்து கட்டாத லிங்கம் கருதாத நெஞ்சம் கருத்தினுள்ளே முட்டாத பூசையன்றோ குருநாதன் மொழிந்ததுவே"** எனும் பாடல்வழி மானசப்பூசையே உண்மையானது உயர்வானது, சிறப்பானது என்கிறார் பட்டினத்தார்.

### முடிவுரை

அன்பு என்ற உயரிய பண்பில் தொடங்கி அன்பிலேயே முடிய வேண்டிய பக்தி நெறி காலப்போக்கில் சமயப்பூசலுக்கும் போருக்கும் வன்முறை வெறியாட்டங்களுக்கும் இடமளித்து சமூகச் சீரழிவிற்குக் காரணமாயிற்று. சமயத்தின் பெயரால் ஏற்படும் சண்டைகளுக்குச் சாட்சி பகிர்கின்றது வரலாறு. அன்புணர்வு என்னும் அகண்டமாம் பக்தி நெறி, குறுகி அத்தன்மையை இழந்து கொடிய விலங்குணர்வாய் மாறியுள்ளது. சமயமும் அரசியலும் கைக்குலுக்கி கொண்டதால்தான் இன்றளவும் மனிதத் தலைகள் மண்ணில் உருண்டு கொண்டிருக்கின்றன. எனவே மதவாதிகளும் சாதீயத் தலைவர்களும் அரசியலில் கலக்காவண்ணம் சட்டமியற்ற வேண்டும். சமய எல்லைகளை உடைத்து சாத்திரக் குப்பைகளை எரித்து சமூகத்தில் ஒரு புரட்சி வெடிக்க வேண்டும். அதற்கான வித்தாக, பட்டினத்தார் எனும் சித்தரின் இறைச் சித்தாந்தம் அமைந்துள்ளது என்றால் அது மிகையல்ல.

# திருக்குறள் உவமை
# சிவபெருமான் உவமேயம்

தமிழாசிரியர் தெ. முருகசாமி
புதுச்சேரி

திரும்பும் திசைதோறும் ஒளிர்வது வைரம், அதுபோல அய்யன் திருவள்ளுவரின் திருக்குறளை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக அனுபவித்துள்ளார்கள்.

திருக்குறளைத் திருத்திச் செம்மை செய்ததாகக் கூறித் தம்பால் வந்த ஒருவரைக் கடிந்து கொண்டதன் வழி திருக்குறளுக்கு வந்த கேட்டை நீக்கிய பைந்தமிழ்ப் பாண்டித்துரைத் தேவரின் தொண்டு, ஒருவகையான திருக்குறள் துய்ப்பு.

பலர் உறையாக, ஆராய்ச்சியாக, பா விளக்கமாக, தாம் படைக்கும் இலக்கியத்தில் பயன்படுத்தும் விதமாக, புதுப்புது வெளியீடாகவெல்லாம் திருக்குறளை அவரவர்க்கேற்ப அனுபவித்தும் காத்தும் வந்துள்ளனர். அந்தத் திருக்குறள் துய்ப்பு வரிசையில் கற்பனைக களஞ்சியம் நல்லாற்றூர் சிவப்பிரகாச சுவாமிகள் ஒருவராவார்.

அவர், திருக்குறளைத் தாம் படைக்கும் இலக்கியங்களில் பல்வேறு விதமாகப் பயன்படுத்தியுள்ளார். குறள் முழுமையை, அதன் செம்பாதியை, சீரை, எடுத்தாண்டதோடு அந்நூலுக்கான உரையாளர்களின் கருத்தை ஏற்றும் மறுத்தும் தாம் கருதியவாறு புது விளக்கம் தந்தும் திருக்குறளை அனுபவித்த சிறப்பைப் பிற புலவரினும் சிவப்பிரகாசதிடத்தே மிகுதியும் காணலாம். அவற்றுள் தாம் வணங்கும் சிவ பெருமானுக்குத் தாம் ஆசானாகப் போற்றும் அய்யன் திருவள்ளுவரின் குறளை உவமையாக்கிக் கூறிய ஒன்றைச் சிவப்பிரகாசரின் சிகரந்தொட்ட செந்தமிழ்த் தொண்டனாகக் கருதலாம்.

கூறப்படும் உவமை, உவமேயத்தினும் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பது உவமைக்கான அடிப்படை இலக்கணம். **உயர்ந்த தன்**

**மேற்றே உள்ளுங் காலை** என்பது தொல்காப்பியம். இந்த அடிப்படையில் சிவப்பிரகாசர், திருக்குறளின் ஈரடிகளைச் சிவபெருமானின் ஈரடிகளுக்கு ஒப்புமை கூறுவது புதியதோர் உவகையை நல்குவதாக உள்ளது.

குறளின் முதலடி, நாற்சீரும், இரண்டாமடி, முச்சீரும். உடையதாகும். இந்த நெடுமையும் குறுமையுமான வடிவம் போலவே மாதொருபாகனாக உள்ள சிவனது திருவடிகள் நீண்டும் குறுகியுமாக உள்ளதாம். அர்த்தநாரியான ஆண்பெண் சேர்ந்த வடிவில் ஆணின் கால் நீண்டும் பெண்ணின் கால் சற்று குறைந்தும் இருக்கும் இயல்பிற்குத் திருக்குறளின் அடிகளே சான்று என்பதைச் சிவப்பிரகாசர் கூறும் அழகைத் தமிழ் அழகாகக் கருதலாம்.

*என்னடிகள் வெண்குறள்நேர் அடியிரண்டும்*
*என்தலையில் இருந்தும்இறை வெங்கை நாட்டில்*
*முன்னடிகள் இரண்டும்நெடில் அழகன் பின்னற்*
*முயங்கடிகள் இரண்டும்நேர் அடிக ளாகப்*
*பன்னடிகள் ஒருநான்கு கொடுந டக்கும்*
*பழுதகல்வெண் துறைபோலப் படர்த லாலே*
*பின்னடிகள் எங்கள்திரு வடிகள் முன்னர்ப்*
*பெயர்ந்தஅடி எழில் இளம்சேய் அடிகள் ஆமே.*

இப்பாடல் திருவெங்கைக்கலம்பத்துள் தாய்க் கூற்றாகச் சிவப்பிரகாசர் திருக்குறளை அனுபவிக்கும் ஓர் அரிய பாடலாகும்.

என் ஆசானாகிய வள்ளுவரின் குறளை ஒத்திருக்கும் திருவடிகளை என் தலை மீது வைத்தருளும் சிவபெருமான் தங்கியுள்ள திருவெங்கை நகரின் பாலை நிலத்தில் காணப்படுகின்ற இரண்டு காலடிகள் வெண்டுறைச் செய்யுள் போலக் காணப்படுவதால் ஓர் ஆடவனுடன் என் மகள் சென்றாளே, யான் யாது செய்வேன்? என ஒருதாய் புலம்புவதாகச் சிவப்பிரகாசர் கூறுகிறார்.

இதில் "என்னடிகள் வெண்குறள்நேர் அடியிரண்டும் என் தலையில் இருத்தும் இறைவெங்கை நாட்டில்" என்ற இரண்டடி மட்டும் சிவப்பிரகாசர் கூற்று.எஞ்சியன தாயின் கூற்றாக உள்ளன.

வள்ளுவத்தை அனுபவித்ததால் அந்நூல் தந்த அய்யனை என்னடிகள் என்கிறார் சிவப்பிரகாசர். உயர்ந்தோரை "அடிகள்"

என்பதாகப் போற்றல் தமிழ் மரபு. அந்நிலையில் தமக்குத் தமிழாசானாக வள்ளுவர் இருந்த உண்மையின் வெளிப்பாட்டையே "என்னடிகள்" என்ற தொடரால் சிவப்பிரகாசர் கூறினார். அத்தகு ஆசான் எழுதிய திருக்குறளடிகளுக்கு நேராக (இணையாக) உள்ள திருவடிகளைச் சிவன் தன் மீது வைத்து திருவடி தீட்சை செய்தான் எனக் கூறுவார்போல "வெண்குறள்நேர் அடியிரண்டும் என் தலையில் இருத்தும் இறை" என்றார்.

சிவனைத் தன் தலை தாழ்த்தி வணங்குவதையே சிவப்பிரகாசர் அங்ஙனம் கூறினாரேனும், கூறிய பாங்கில் காணும் அலங்காரம் தமிழலங்காரமாக உள்ளது. தான் வணங்கும் சிவனது திருவடி, *ஆண்பாதி பெண் பாதிக்கான ஒவ்வோர் திருவடி.* இந்த மாதொருபாகத் திருவடி அமைப்பிற்குச் சரியான உவமை குறளன்றி வேறில்லை என நிறுவும் சிவப்பிரகாசரின் துணிச்சலை என்னென்பது!

ஏனெனில், "சிவனது திருவடிபோல் உள்ள திருக்குறள் நிலவும் திருவெங்கை நாட்டில்" எனத் தாம் வணங்கும் தெய்வத்திற்கு ஏற்றங்கூறி உவமைப்படுத்தாமல் திருக்குறளை உவமைப்படுத்தினாரெனில் அதைத் தமிழ்த் துணிச்சல் என்றே கூறலாம். இங்ஙனம் உவமைப்படுத்தியதில் "என்னடிகள் வெண்குறள்நேர் அடியிரண்டும்" என்ற தொடர்தான் சிவப்பிரகாசர் அய்யன் திருவள்ளுவரை அனுபவித்ததற்கான சான்றாகும்.

பொதுவாகக் குறள்வெண்பா யாவும் நாற்சீரும் முச்சீருமானவையே யானாலும் எல்லாக் குறளும் சிவனது திருவடிக்கு ஒப்புமையாகா என்ற குறிப்பை நுட்பமாகக் கூறவே சிவப்பிரகாசர் "எனது ஆசானாகிய திருவள்ளுவர் செய்ததே ஒப்புமையாம்" என்றது தான் தனிச்சிறப்புக்குரியது. இதனால் குறள் வடிவாகச் செய்யப்பட்டவை யாவும் ஒப்புமையாகா என்ற புரட்சியான உணர்வால் அய்யன் திருவள்ளுவரின் திருக்குறளுக்கே ஏற்றங் கொடுக்கப்பட்டது எனலாம்.

இங்ஙனம் கூறியதன் நுட்பத்தை வேறோர் நிலையிலும் கண்டு மகிழலாம். தெய்வத்திற்கு உவமை கூறுங்கால் தெய்வப்புலவர் எனப்படும் அய்யனின் வாக்கே பொருந்தும் என்பதன்றிப் பிற குறள்கள் பொருந்தா என்பது கருத்தாம்.

மேலும் இதுபற்றி ஆய்கையில் வேறோர் இன்பம் புலப்படும். நெடுமை குறுமை என்ற வடிவ ஒப்புமையால் மட்டுமன்றி அக்குறளடிகள் தரும் பொருளின்பம் சிவனது திருவடிதரும் அருளின்பமாம். உற்றறியும் காற்றுக்கோ, பருகும் நீருக்கோ வடிவமில்லை. ஆனால் உண்ணும் எந்த பொருளுக்கும் ஒவ்வொரு வடிவம் உண்டு. அவற்றை உண்ணுங்கால் அந்தந்தப் பொருளையும் அந்தந்த வடிவத்தோடே உண்ணுதல் போலக் குறளின் ஈரடி வடிவத்திற்குள் அமைந்த பொருளை அனுபவித்தல் போலச் சிவனது திருவடிகள் அருளின்பத்தை நல்குகின்றன என்பது கருத்தாகும். இப்படியாக அய்யன் திருவள்ளுவரை அனுபவித்த பெருமை சிவப்பிரகாசர் ஒருவரையே சாரும் எனலாம்.

இங்ஙனம் திருக்குறளையும் சிவத்தையும் ஒரு சேர அனுபவித்த சிவப்பிரகாசர் அவ்வனுபவச் சாயலின் தொடர்ச்சியில் தாய்க் கூற்றைப் பாடலில் நிறைவு செய்கிறார்.

ஓர் ஆடவனுடன் தன் மகள் மாலை நிலவழியே சென்றதைத் தாய் அந்நிலத்தில் படிந்துள்ள அடிச் சுவடுகளால் உறுதிப்படுத்துகிறாள். நீளமான இரு காலடிச் சுவடுகளுக்குப் பின்னே குட்டையான இரு காலடிச் சுவடுகள் தென்படுகின்றன. முன்னவை ஆண் அடிகளையும் பின்னவை பெண் அடிகளையும் நினைவுபடுத்துகின்றன. இம்மட்டோடறிந்தவள் தாய்.

இதனைத் தாய்க் கூற்றாகக் கருதும் சிவப்பிரகாசர், வெண்பாவின் இனமான நாலடி வெண்டுறைப் பாடலானது முன் இரண்டடி ஐந்து சீராயும் பின் இரண்டடி நாற்சீராயும் சீர் கூடியும் குறைந்தும் காணப்படுதல் போல் ஆடவனது காலடிகளைச் சார்ந்து பெண் காலடிச் சுவடுகள் இருந்தன என்கிறார்.

எனவே ஒரு தாயின் கற்பனை முகிழ்ப்பில் மலர்ந்த சிவப்பிரகாசரின் உவமை உவமேயங்களின் அற்புதம் அய்யன் திருவள்ளுவரின் தெய்வத்தமிழ் முகவரியாக மணம் பரப்புகின்றது அன்றோ!

# நான்மாடல் கண்ட
# நான்காம் தமிழ்ச் சங்கம்

சங்கத்தமிழ் இலக்கியம் தாரணி தமிழர்க்குத்

தரும் அமிழ்தாம் அரும் வாக்கியம்

அங்கம் அழகுபெறும் ஆயுளும் கூடிவரும்

அன்னை தமிழ் மருந்து ஆகும்

தாம்படைக்கும் புதுமைக் குக்கரு உருதந்து

சான்றஅ றிஞராக்கும்

நாம் பயிலத்தந் தார்; திரு. பாண்டித்துரைத் தேவர்

நான்காம் தமிழ்ச் சங்கமாகும்.

அன்புடன்,

கணபதி பிச்சை
மதுரை

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/56 January 2010

# செந்தமிழ்க் கல்லூரி



## மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

### சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

| | | |
|---|---|---|
| **இரா. அழகுமலை** | **முனைவர் க. சின்னப்பா** | **இரா. குருசாமி** |
| செயலாளர் | முதல்வர் | செயலாளர் |
| மதுரைத் தமிழ்ச் சங்கம் | செந்தமிழ்க் கல்லூரி | செந்தமிழ்க் கல்லூரி |

அனுப்புநர்,
**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

*From*
**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.